# TNPSC GROUP I / II – PRELIMINARY
# INDIAN POLITY - WORKSHEET

## கூட்டாட்சியின் தன்மைகள் மற்றும் மத்திய மாநில உறவுகள்

### கூட்டாட்சியின் தன்மைகள்

அரசானது அரசியல் அறிவியலாளர்களால் **ஒற்றை மற்றும் கூட்டாட்சி அரசு** என இருவகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. ஒற்றை அரசாங்கமுறையில் மத்திய அரசில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டு இருக்கின்றன. மத்திய அரசாங்கம் மாநில மற்றும் வட்டார அரசாங்கங்களை ஏற்படுத்தி அவற்றிற்கு அதிகாரங்களை மாற்றி தருகிறது.
(எ.கா) ஐக்கிய பேரரசு, பிரான்ஸ்
2. கூட்டாட்சி அரசியல் முறை என்பது மத்திய அரசு மற்றும் மாநில அரசாங்களுக்கிடையே அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டு அரசியலமைப்பு ரீதியாக செயல்படக்கூடிய அமைப்பாக செயல்படுகிறது. இரண்டு அரசுகளும் தத்தம் அதிகார வரம்புகளில் தன்னிச்சையாக இயங்குகின்றன.
(எ.கா) அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா

**இந்திய அரசியலமைப்பில் கூட்டாட்சி அரசுமுறையின் அம்சங்கள்**

- இரட்டை அரசு
- எழுத்தப்பட்ட அரசியலமைப்பு
- அதிகாரப் பகிர்வு
- அரசியலமைப்பின் மேன்மை
- நெகிழா அரசியலமைப்பு
- சுதந்திரமான நீதித்துறை
- ஈரவை பாராளுமன்றம்

**இந்திய அரசியலமைப்பின் ஒற்றையாட்சி அரசுமுறையின் அம்சங்கள்**

- ஒற்றை அரசியலமைப்பு
- ஒற்றைக் குடியுரிமை
- மாநிலங்களின் இருப்புக்கு தன்னிச்சையான உரிமை இல்லை
- பாராளுமன்ற மேலவையின் கூட்டாட்சிக்கு எதிரான தன்மை

- ஆளுநர் நியமனம்
- நெருக்கடி கால அதிகாரங்கள்
- அகில இந்திய சேவைகள்
- தேர்தல் ஆணையம்
- ஒருங்கிணைந்த தணிக்கை

**குறிப்புகள்:**

- **ஒப்பந்தம்** என்று பொருள்படும் இலத்தீனிய **போடஸ் (foedus)** என்ற சொல்லிலிருந்து கூட்டாட்சி (Federation) என்ற சொல் ஏற்பட்டது.
- அமெரிக்கா தான் உலகிலேயே முதல் மற்றும் பழமையான கூட்டாட்சி அரசாங்கம் ஆகும்.
- இந்திய அரசியலமைப்பின் சரத்து 1, இந்தியாவை பல மாநிலங்களின் ஒன்றியம் எனக் கூறுகின்றது.
- இந்தியாவின் கூட்டாட்சி முறையானது **கனடாவின்** அமைப்பினை அடிப்படையாகக் கொண்டது.

- இந்தியாவின் கூட்டாட்சி முறையினை **கிரான்வில் ஆஸ்டின் "கூட்டுறவு கூட்டாட்சி"** என்கிறார்.
- K.C. வியர் இந்தியாவை "**அரை-கூட்டாட்சி**" என்று குறிப்பிடுகிறார். "இந்தியா ஒரு கூட்டாட்சி நாடு, மானியமாக சில ஒற்றையாட்சி தன்மைகளை பெற்றுள்ளது என்பதற்கு மாறாக அதனை ஓர் ஒற்றையாட்சி நாடாகவும், மானியமாக கூட்டாட்சி தன்மைகளைப் பெற்றுள்ள கூட்டாட்சி" என்று வர்ணிக்கிறார்.
- மோரிஸ் ஜோன்ஸ் இந்தியாவை "பேரம் பேசும் கூட்டாட்சி" என்று குறிப்பிடுகிறார்.
- ஐவர் ஜென்னிங்ஸ் இந்தியாவை ஒரு "வலுவான ஒற்றையாட்சி போக்கு கொண்ட கூட்டாட்சி" என்று விவரிக்கிறார்.
- கே.பி. முகர்ஜி "இந்தியா ஒரு கூட்டமைப்பே அல்ல" என்று குறிப்பிடுகிறார்.
- **கே.எம். முன்சி** இந்தியாவை "ஒரு ஒற்றையாட்சி அரசாங்கத்தின் பல முக்கிய அம்சங்களுடன் கூடிய ஒரு **அரை-கூட்டாட்சி ஒன்றியம்**" என்று கூறுகிறார்.
- **பேராசிரியர். அலெக்ஸாண்ட்ரோவிச்**, இந்திய கூட்டாட்சி தனித்தன்மை கொண்ட அதன் சொந்த வகையாகும் என்று கூறுகிறார்.

## மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையேயான உறவுகள்

இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சி கட்டமைப்பில், அனைத்து அதிகாரங்களும் (சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நிதி) மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே பிரிக்கப்பட்டுள்ளது.

மத்திய-மாநில உறவுகளை மூன்று தலைப்புகளின் கீழ் ஆய்வு செய்யலாம்:

- சட்டமன்ற உறவுகள் (சரத்துகள் 245 முதல் 255 வரை)
- நிர்வாக உறவுகள் (சரத்துகள் 256 முதல் 263 வரை)
- நிதி உறவுகள் (சரத்துகள் 268 முதல் 293 வரை)

# சட்டமன்ற உறவுகள்

இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சி கட்டமைப்பில், அனைத்து அதிகாரங்களும் (சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நிதி) மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே பிரிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் தத்தம் துறைகளில் தன்னிச்சையாக செயல்பட்டாலும், கூட்டாட்சி அமைப்பு திறம்பட செயல்பட அவைகளுக்கு இடையே இணக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு அவசியமாக உள்ளது.

**சட்டமன்ற உறவுகள்**

- அரசியலமைப்பின் பகுதி XI - ல் 245 முதல் 255 வரையிலான சரத்துகள் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான சட்டமன்ற உறவுகளை விவரிக்கின்றன.

- இந்திய அரசியலமைப்பு சட்டமியற்றும் அதிகாரங்களை மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே பகுதி மற்றும் துறைகளின் அடிப்படையில் இரண்டாக பிரிக்கிறது.

- இவ்வாறு, மத்திய-மாநில அரசுகளின் சட்டமன்ற உறவுகளில் நான்கு அம்சங்கள் உள்ளன. அவை,

   1. மத்திய - மாநில பிரதேச அதிகாரப் பகிர்வின் எல்லை
   2. சட்டத்துறைகளின் பகிர்வு
   3. மாநிலப் பட்டியலில் நாடாளுமன்றம் சட்டமியற்றுதல் மற்றும்
   4. மாநில சட்டமியற்றும் அதிகாரத்தின் மீது மத்திய அரசின் கட்டுப்பாடு.

### 1. மத்திய - மாநில பிரதேச அதிகாரப் பகிர்வின் எல்லை

அரசியலமைப்பு, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டமன்ற அதிகாரங்களின் பிராந்திய வரம்புகளை இவ்வாறு வரையறுக்கிறது:

i. இந்தியாவின் முழுப் பகுதிக்கும் அல்லது எந்த ஒரு பகுதிக்கும் நாடாளுமன்றம் சட்டங்களை இயற்றலாம். இந்தியாவின் பிரதேசத்தில் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் வேறு எந்தப் பகுதியும் அடங்கும்.

ii. ஒரு மாநில சட்டமன்றம் மாநிலத்தின் முழுப் பகுதிக்கும் அல்லது எந்தப் பகுதிக்கும் சட்டங்களை இயற்ற முடியும். மாநில சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்கள் மாநிலத்திற்கு வெளியே பொருந்தாது

iii. பாராளுமன்றம் மட்டுமே "பிரதேசம் தாண்டிய சட்டங்களை" இயற்ற முடியும். எனவே, நாடாளுமன்றத்தின் சட்டங்கள் இந்திய குடிமக்களுக்கும், உலகின் எந்தப் பகுதியிலும் உள்ள அவர்களின் சொத்துக்களுக்கும் பொருந்தும்.

### 2. சட்டத்துறைகளின் பகிர்வு

அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையில், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே மூன்று வகையான அதிகாரப் பங்கீட்டுப் பட்டியல்கள்

உள்ளன, அவை பட்டியல் - I (ஒன்றியப் பட்டியல்), பட்டியல் - II (மாநிலப் பட்டியல்) மற்றும் பட்டியல் - III (பொதுப் பட்டியல்).

i. ஒன்றியப் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு துறையிலும் சட்டங்களை இயற்றுவதற்கு பாராளுமன்றத்திடம் பிரத்தியேக அதிகாரங்கள் உள்ளன. இந்த பட்டியலில் தற்போது 98 துறைகள் (முதலில் 97 துறைகள்) உள்ளன. எ.கா. பாதுகாப்பு, வங்கி, வெளியுறவு, நாணயம், அணுசக்தி, காப்பீடு, தகவல் தொடர்பு, மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகம், மக்கள் தொகை கணக்கெடுப்பு, தணிக்கை மற்றும் பல.

ii. மாநில சட்டமன்றத்திற்கு "சாதாரண சூழ்நிலைகளில்" மாநிலப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு துறையிலும் சட்டங்களை இயற்றுவதற்கான பிரத்யேக அதிகாரங்கள் உள்ளன. இந்த பட்டியல் தற்போது பொது ஒழுங்கு, காவல்துறை, பொது சுகாதாரம், விவசாயம், சிறைத்துறை, உள்ளாட்சி, மீன்பிடி, சந்தைகள், திரையரங்குகள், சூதாட்டம் போன்ற 59 துறைகளை (முதலில் 66 துறைகள்) கொண்டுள்ளது.

iii. பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றம் ஆகிய இரண்டும் பொதுப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு துறையிலும் சட்டங்களை இயற்ற முடியும். இந்தப் பட்டியலில் தற்போது குற்றவியல் சட்டம் மற்றும் நடைமுறை, சிவில் நடைமுறை, திருமணம் மற்றும் விவாகரத்து, மக்கள் தொகைக் கட்டுப்பாடு மற்றும் குடும்பக் கட்டுப்பாடு, மின்சாரம், தொழிலாளர் நலன், பொருளாதாரம் மற்றும் சமூகத் திட்டமிடல், மருந்துகள், செய்தித்தாள்கள், புத்தகங்கள் மற்றும் அச்சகம் போன்ற 52 துறைகள் (முதலில் 47 துறைகள்) உள்ளன.

iv. **எஞ்சிய அதிகாரங்கள் (சரத்து 248):** எந்தவொரு பட்டியலிலும் பட்டியலிடப்படாத துறைகளில் சட்டங்களை இயற்றுவதற்கு பாராளுமன்றத்திற்கே அதிகாரம் உள்ளது (ஒன்றியப் பட்டியலின் பதிவு 97). இந்த பட்டியல்களின் துறைகளில் முரண்பாடு எழும்போதெல்லாம், மற்ற பட்டியல்களை விட ஒன்றியப் பட்டியலே மேலோங்குகிறது.

v. **1976 ஆம் ஆண்டின் 42 வது திருத்தச் சட்டம்,** மாநிலப் பட்டியலிலிருந்து ஐந்து துறைகளை ஒருங்கிணைந்த பட்டியலுக்கு மாற்றியது, அதாவது (அ) கல்வி, (ஆ) வனத்துறை, (இ) எடைகள் மற்றும் அளவுகள், (ஈ) வனவிலங்குகள் மற்றும் பறவைகளின் பாதுகாப்பு, மற்றும் (இ) நீதி நிர்வாகம் (உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்கள் தவிர)

vi. **2016 ஆம் ஆண்டின் 101வது திருத்தச் சட்டம்** சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பாக ஒரு சிறப்பு ஏற்பாடு செய்துள்ளது. அதன்படி, மத்திய அரசு அல்லது மாநிலத்தால் விதிக்கப்படும் சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான சட்டங்களை இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றத்துக்கு உள்ளது. மேலும், மாநிலங்களுக்கு இடையேயான சரக்குகள் அல்லது சேவைகளின் வர்த்தகத்தில், சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான சட்டங்களை உருவாக்க பாராளுமன்றத்திற்கு பிரத்யேக அதிகாரம் உள்ளது.

### 3. மாநிலப் பட்டியலில் நாடாளுமன்றம் சட்டமியற்றுதல்

பின்வரும் ஐந்து அசாதாரண சூழ்நிலைகளின் கீழ் மாநிலப் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு துறையிலும் சட்டங்களை உருவாக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

### i. மாநிலங்களவை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும் போது - சரத்து 249

- தேசிய நலன் கருதி சரக்கு மற்றும் சேவை வரி அல்லது மாநிலப் பட்டியலில் உள்ள துறை தொடர்பாக நாடாளுமன்றம் சட்டங்களை இயற்றுவது அவசியம் என்று மாநிலங்களவை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும் போது, அந்த துறையில் சட்டமியற்றும் அதிகாரத்தை பாராளுமன்றம் பெறுகிறது.
- இந்த தீர்மானத்தை மாநிலங்களவை கூட்டத்தில் பங்குபெறும் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களிக்க வேண்டும்.
- இந்த தீர்மானம் ஓராண்டுக்கு அமலில் இருக்கும் ஒரு வருடத்திற்கு மிகாமல் அதை எத்தனை முறை வேண்டுமானாலும் புதுப்பித்துக் கொள்ளலாம்.

### ii. தேசிய நெருக்கடிநிலையின் போது - சரத்து 250

- தேசிய நெருக்கடிநிலை பிரகடனம் நடைமுறையில் இருக்கும் போது, சரக்கு மற்றும் சேவை வரி அல்லது மாநிலப் பட்டியலில் உள்ள துறைகளில் சட்டம் இயற்றும் அதிகாரத்தை நாடாளுமன்றம் பெறுகிறது.
- தேசிய நெருக்கடிநிலை முடிவுற்ற ஆறு மாதங்களுடன் அவை காலாவதியாகிவிடும்.

### iii. மாநிலங்கள் கோரிக்கை வைக்கும் போது - சரத்து 252

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் சட்டமன்றங்கள், மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு துறையில் சட்டங்களை இயற்ற வேண்டும் என்று நாடாளுமன்றத்தைக் கோரும் தீர்மானங்களை நிறைவேற்றினால், அதை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டங்களை நாடாளுமன்றம் இயற்றலாம்.
- அவ்வாறு இயற்றப்பட்ட சட்டம் தீர்மானங்களை நிறைவேற்றிய மாநிலங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

### iv. சர்வதேச ஒப்பந்தங்களைச் செயல்படுத்த – சரத்து 253

1. சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது மரபுகளை நடைமுறைப்படுத்துவதற்காக மாநிலப் பட்டியலில் உள்ள எந்தவொரு துறையிலும் பாராளுமன்றம் சட்டங்களை இயற்ற முடியும்.
2. இந்த விதி மத்திய அரசு தனது சர்வதேச கடமைகளை நிறைவேற்ற உதவுகிறது.

3. மேற்கூறிய விதியின் கீழ் இயற்றப்பட்ட சட்டங்களின் சில எடுத்துக்காட்டுகள் ஐக்கிய நாடுகளின் (சலுகைகள் மற்றும் சட்டவிலக்குகள்) சட்டம், 1947 ஜெனிவா ஒப்பந்தச் சட்டம், 1960

### v. குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது

- ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டால், அந்த மாநிலம் தொடர்பாக மாநிலப் பட்டியலில் உள்ள எந்த ஒரு துறையிலும் சட்டங்களை இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளது.

- குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு பிறகும் நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டம் தொடர்ந்து செயல்படும்.

## 4. மாநில சட்டமியற்றும் அதிகாரத்தின் மீது மத்திய அரசின் கட்டுப்பாடு

விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் மாநிலப் பட்டியலில் உள்ள துறைகளின் மீது சட்டமியற்றும் பாராளுமன்றத்தின் அதிகாரத்தைத் தவிர, பின்வரும் வழிகளில் மாநில சட்டமியற்றும் அதிகாரத்தின் மீது மத்திய அரசின் கட்டுப்பாட்டைப் பயன்படுத்துவதற்கு அரசியலமைப்பு அதிகாரம் அளிக்கிறது:

### i. சரத்து 200

மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு ஆளுநர் ஒதுக்கலாம். அத்தகைய மசோதாவின் மீது குடியரசுத் தலைவர் முழுமையான வீட்டோ அதிகாரத்தைப் பெறுகிறார் (சரத்துகள் 200 மற்றும் 201).

### ii. சரத்து 304

ஒரு மாநிலத்திற்குள் உள்ள வர்த்தக சுதந்திரம் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் மாநில மசோதா, குடியரசுத் தலைவரின் முன் அனுமதியுடன் மட்டுமே மாநிலத்தின் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் (சரத்து 304).

### iii. சரத்து 360

நிதி நெருக்கடியின் போது மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பண மசோதாக்கள் மற்றும் பிற நிதி மசோதாக்களை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஒதுக்கி வைக்குமாறு மத்திய அரசு மாநிலங்களுக்கு உத்தரவிடலாம் (சரத்து 360).

### iv. சரத்து 213

சில சந்தர்ப்பங்களில் குடியரசுத் தலைவரின் அறிவுறுத்தல் இல்லாமல் ஆளுநர் ஒரு அவசரச் சட்டத்தை இயற்ற முடியாது (சரத்து 213).

மேற்கூறியவற்றிலிருந்து, அரசியலமைப்புச் சட்டம், சட்டமியற்றும் துறையில் மத்திய அரசுக்கு உயர்வான நிலையை வழங்கியுள்ளது என்பது தெளிவாகிறது.

# நிர்வாக உறவுகள்

அரசியலமைப்பின் பகுதி XI இல் **256 முதல் 263** வரையிலான சரத்துகள் மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான நிர்வாக உறவுகளை விளக்குகின்றன.

## I. நிர்வாக அதிகாரங்களின் பகிர்வு

1. சில வேற்றுமைகளைத் தவிர, சட்டமன்ற அதிகாரங்களின் பகிர்வின் அடிப்படையிலேயே மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான நிர்வாக அதிகாரங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

2. மத்திய அரசின் நிர்வாக அதிகாரம் இந்தியா முழுமைக்கும் பரவியுள்ளது.

3.
   i. பாராளுமன்றத்திற்கு சட்டமியற்றும் பிரத்தியேக அதிகாரம் உள்ள விவகாரங்கள் (ஒன்றிய பட்டியலில் பட்டியலிடப்பட்ட துறைகள்) மற்றும்
   ii. எந்தவொரு ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையால் வழங்கப்பட்ட உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் அதிகார வரம்பைப் பயன்படுத்துதல் .

   இதேபோல், ஒரு மாநிலத்தின் நிர்வாக அதிகாரங்கள், மாநில சட்டமன்றத்திற்கு சட்டமியற்றுவதற்கான பிரத்யேக அதிகாரம் உள்ள விவகாரங்களில் (மாநிலப் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள துறைகள்) வழங்கப்பட்டுள்ளது.

4. பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் ஆகிய இரண்டும் சட்டமியற்றும் அதிகாரத்தைக் கொண்ட விவகாரங்களின் (அதாவது, பொதுப் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள துறைகள்), நிர்வாக அதிகாரங்கள் மாநிலங்களிடமே உள்ளன.

## II. மாநிலங்களுக்கு மத்திய அரசு வழிகாட்டுதல்

பின்வரும் விவகாரங்களில் மாநிலங்கள் தங்கள் நிர்வாக அதிகாரத்தைப் பயன்படுத்துவது தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு மத்திய அரசிற்கு அதிகாரம் உள்ளது:

### சரத்து 256
சரத்து 256, மாநிலத்தின் நிர்வாக அதிகாரங்கள் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களை மீறாமல் செயல்படுத்தப்பட வேண்டும்.

### சரத்து 257
சரத்து 257, ஒன்றிய அரசின் நிர்வாக அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்குத் தடங்கல் ஏற்படாத வகையிலும், ஊறு விளைவிக்காமலும் மாநிலங்கள் தங்கள் நிர்வாக அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

### சரத்து 257 (2)
தேசிய அல்லது இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தகவல் தொடர்பு சாதனங்களின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு.

**சரத்து 257 (3)**
மாநிலத்திற்குள் இயங்கும் ரயில்வே பாதுகாப்புக்கு நடவடிக்கைகள் எடுத்தல்.

**சரத்து 350 A**
மாநிலத்தில் உள்ள மொழிவாரி சிறுபான்மை குழுக்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வியியை தாய்மொழியில் கற்பிப்பதற்கான போதுமான வசதிகளை வழங்குதல்.

**சரத்து 351 (பகுதி XVII)**
இந்தி மொழியின் வளர்ச்சி: இந்தியாவின் பலதரப்பட்ட பண்பாட்டின் அனைத்து கூறுகளுக்கும் ஊடகமாக செயல்படும் வகையில் இந்தி மொழியின் பரவலை ஊக்குவிப்பதும், அதை வளர்ப்பதும் ஒன்றியத்தின் கடமையாகும்.

## III. நெருக்கடி நிலை உறவுகள்

**சரத்து 352**
தேசிய நெருக்கடிநிலைச் செயல்பாட்டின் போது (சரத்து 352 இன் கீழ்), "எந்தவொரு" விவகாரத்திலும் மாநிலத்திற்கு நிர்வாக வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு மத்திய அரசு உரிமை பெறுகிறது. இதனால், மாநில அரசுகள் மத்திய அரசின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படுகின்றன.

**சரத்து 356**
ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி விதிக்கப்படும்போது (சரத்து 356ன் கீழ்), குடியரசுத் தலைவர் மாநில அரசாங்கத்தின் செயல்பாடுகளை தானே ஏற்றுக் கொள்ள முடியும்.

**சரத்து 360**
நிதி நெருக்கடிநிலையின் போது (பிரிவு 360 இன் கீழ்), நிதி ஒழுங்குமுறைளைக் கடைப்பிடிக்க மாநிலங்களுக்கு மத்திய அரசு வழிகாட்டலாம்.

**பிற விதிகள்**

**i. சரத்து 355**
சரத்து 355 மத்திய அரசின் மீது இரண்டு கடமைகளை விதிக்கிறது: (அ) வெளிநாட்டு ஆக்கிரமிப்பு மற்றும் உள்நாட்டு கலவரத்திற்கு எதிராக ஒவ்வொரு மாநிலத்தையும் பாதுகாப்பது மற்றும் (ஆ) ஒவ்வொரு மாநிலத்தின் அரசாங்கமும் அரசியலமைப்பின் விதிகளின்படி செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

ii. மாநிலத் தேர்தல் ஆணையர், மாநில ஆளுநரால் நியமிக்கப்பட்டாலும், குடியரசுத் தலைவரால் மட்டுமே நீக்கப்பட முடியும்.

## IV. மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு

**i. சரத்து 263**
குடியரசுத் தலைவர் (சரத்து 263ன் கீழ்) மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே உள்ள பொதுவான நலன்களை விசாரிக்கவும் விவாதிக்கவும்

மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சிலை நிறுவ முடியும். அந்த குழு 1990 இல் அமைக்கப்பட்டது.

### ii. சரத்து 307

மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தக ஆணையத்தை (சரத்து 307) அமைப்பதற்கும், அதற்கு பொருத்தமான செயல்பாடுகளை வழங்குவதற்கும் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

## V. அரசியலமைப்பு சாரா அமைப்புகள்

i. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் மேம்படுத்துவதற்கு அரசியலமைப்பு சாரா அமைப்புகள் உள்ளன.

ii. அரசியலமைப்பு சாராத ஆலோசனை அமைப்புகளில் நிதி ஆயோக் (திட்டக் குழுவைப் பின்தொடர்ந்தது), தேசிய ஒருமைப்பாட்டு குழு, மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல குழு, மத்திய உள்ளாட்சி குழு, மண்டல குழுக்கள், வடகிழக்கு குழு ஆகியவை அடங்கும்.

iii. பரந்த அளவிலான விஷயங்களில் மத்திய-மாநில ஆலோசனைகளை எளிதாக்குவதற்கு ஆண்டுதோறும் அல்லது காலமுறையாக நடைபெறும் முக்கியமான மாநாடுகள் பின்வருமாறு: (i) ஆளுநர்களின் மாநாடு (குடியரசுத் தலைவரின் தலைமையில்). (ii) முதலமைச்சர்கள் மாநாடு (பிரதமரின் தலைமையில்). (iii) தலைமைச் செயலாளர்கள் மாநாடு (கேபினட் செயலாளர் தலைமையில்).

### மத்திய-மாநில உறவு - TNPSC கேள்வி

Which are the articles that describe situations and confer power to Union Government to claim control over states?

a. Art 368 and 313 b. Art 356 and 363 c. Art 365, 256 and 257

d. Art 349 and 350 e. Answer not known

எந்த சட்டங்கள் சூழ்நிலைக் கருதி மாநில அரசுகளை மத்திய அரசு கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் கூறுகின்றன?

a. சரத்து 368 மற்றும் 313 b. சரத்து 356 மற்றும் 363

d. சரத்து 365, 256 மற்றும் 257 d. சரத்து 349 மற்றும் 350

e. விடை தெரியவில்லை

# நிதி உறவுகள்

அரசியலமைப்பின் பகுதி XII இல் 268 முதல் 293 வரையிலான சரத்துகள் மத்திய-மாநில நிதி உறவுகளைக் கையாள்கின்றன.

## I. வரிவிதிப்பு அதிகாரங்கள் - ஒதுக்கீடு

அரசியலமைப்பு, வரிவிதிப்பு அதிகாரங்களை மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே பின்வரும் வழிகளில் பிரிக்கிறது:

1. ஒன்றிய பட்டியலில் (எண்ணிக்கையில் 13 உள்ளது) பட்டியலிடப்பட்ட துறைகளுக்கு வரி விதிக்க பாராளுமன்றத்திற்கு பிரத்யேக அதிகாரம் உள்ளது.
2. மாநிலப் பட்டியலில் (எண்ணிக்கையில் 18 உள்ளது) பட்டியலிடப்பட்ட துறைகளுக்கு வரி விதிக்க மாநில சட்டமன்றத்திற்கு பிரத்யேக அதிகாரம் உள்ளது.
3. வரிச் சட்டத்தைப் பொறுத்தவரை பொதுவான அதிகார வரம்பு இல்லை.
4. வரிவிதிப்புக்கான எஞ்சிய அதிகாரங்கள் (அதாவது, மூன்று பட்டியல்களில் எதிலும் குறிப்பிடப்படாத வரிகளை விதிக்கும் அதிகாரம்) பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## II. வரி வருவாய் பங்கீடு

2000 ஆம் ஆண்டின் 80 வது திருத்தச் சட்டம் மற்றும் 2016 ஆம் ஆண்டின் 101 வது திருத்தச் சட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான வரி வருவாயைப் பங்கீட்டில் பெரும் மாற்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளன.

### (i) 80வது சட்டத்திருத்தம்

10வது நிதிக்குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தும் வகையில் 80வது சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

சில மத்திய வரிகள் மூலம் பெறப்பட்ட மொத்த வருமானத்தில் 29% மாநிலங்களுக்குச் செல்ல வேண்டும் என்று ஆணையம் பரிந்துரைத்தது.

இது “அதிகாரப்பகிர்வுக்கான மாற்றுத் திட்டம்“ என்றும் அறியப்படுகிறது மேலும் இது ஏப்ரல் 1, 1996 முதல் நடைமுறைக்கு வந்தது.

### (ii) 101வது சட்டத்திருத்தம்

101வது திருத்தம், நாட்டில் புதிய வரி விதிப்பு முறையை (அதாவது சரக்கு மற்றும் சேவை வரி - ஜிஎஸ்டி) அறிமுகம் செய்ய வழி வகுத்தது.

### A. மத்திய அரசால் விதிக்கப்படும் ஆனால் மாநிலங்களால் வசூலிக்கப்பட்டு தனதாக்கிக்கொள்ளப்படும் வரிகள் (சரத்து 268):

இடைமாற்றச்சீட்டுகள், காசோலைகள், உறுதிமொழி குறிப்புகள், காப்பீட்டுக் கொள்கைகள், பங்குகள் பரிமாற்றம் மற்றும் பிறவற்றின் முத்திரைத்தாள் வரிகள் இந்தப் பிரிவில் அடங்கும்.

**B. மத்திய அரசால் விதிக்கப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு ஆனால் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட வரிகள் (சரத்து 269):**

i. பின்வரும் வரிகள் இந்த வகையின் கீழ் வரும்: மாநிலங்களுக்கு இடையேயான வணிகம் அல்லது வர்த்தகத்தின் போது (செய்தித்தாள்கள் தவிர) பொருட்களை விற்பனை செய்வதற்கோ அல்லது வாங்குவதற்கோ விதிக்கப்படும் வரிகள்.

ii. மாநிலங்களுக்கு இடையேயான வணிகம் அல்லது வர்த்தகத்தின் போது சரக்குகளின் மீதான வரிகள்.

**C. மாநிலங்களுக்கு இடையேயான வணிகம் அல்லது வர்த்தகத்தில் விதிக்கப்பட்டு மற்றும் வசூலிக்கப்படும் சரக்கு மற்றும் சேவை வரி (சரத்து 269-A)**

மாநிலங்களுக்கு இடையேயான வணிகம் அல்லது வர்த்தகத்தின் போது பரிமாற்றப்படும் பொருட்களுக்கு மத்திய அரசால் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. ஆனால், இந்த வரியானது ஜிஎஸ்டி கவுன்சிலின் பரிந்துரையின் பேரில் பாராளுமன்றம் வழங்கிய முறையில் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே பிரிக்கப்படுகிறது.

**D. மத்திய அரசால் விதிக்கப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு, மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே பகிர்ந்துகொள்ளப்படும் வரிகள் (சரத்து 270):**

ஒன்றிய பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகளும் இந்த பிரிவில் அடங்கும்.

**E. மத்திய அரசின் நோக்கங்களுக்காக விதிக்கப்படும் சில வரிகள் மீதான கூடுதல் மிகைக்கட்டணம் (சரத்து 271):**

சரத்து 269 மற்றும் 270 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரிகள் மீதான கூடுதல் மிகைக்கட்டணங்களை நாடாளுமன்றம் எப்போது வேண்டுமானாலும் விதிக்கலாம்.

**F. மாநிலங்களால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, மற்றும் தனதாக்கிகொள்ளப்படும் வரிகள்:**

இவை பிரத்தியேகமாக மாநிலங்களுக்குச் சொந்தமான வரிகள். அவை மாநில பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளன, மொத்தம் 18 உள்ளன. எ.கா: (i) நில வருவாய் (ii) விவசாய வருமானத்தின் மீதான வரிகள்.

## III. வரி அல்லாத வருவாய்களின் பகிர்வு

**A. மத்திய அரசு:** பின்வருபவை மத்திய அரசின் வரி அல்லாத வருவாயின் முக்கிய ஆதாரங்களாக அமைகின்றன: (i) தபால் மற்றும் தந்திகள் (ii) ரயில்வே (iii) வங்கியியல் (iv) ஒளிபரப்பு (v) நாணயம் மற்றும் செலாவணி (vi) மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் (vii) பறிமுதல் செய்யப்பட்டச் சொத்துகள் மற்றும் (vii) பல.

**B. மாநிலங்கள்:** மாநிலங்களின் வரி அல்லாத வருவாயின் முக்கிய ஆதாரங்களாக பின்வருபவை அமைகின்றன: (i) நீர்ப்பாசனம் (ii) காடுகள் (iii) மீன்வளம் (iv) மாநில பொதுத்துறை நிறுவனங்கள் (v) பறிமுதல் செய்யப்பட்டச் சொத்துகள் மற்றும் (vi) பல.

## IV. மாநிலங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள்

மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையே வரிகளை பகிர்ந்து கொள்வதைத் தவிர, மத்திய வளங்களில் இருந்து மாநிலங்களுக்கு மானியங்களை வழங்குவதற்கான விதிகளை அரசியலமைப்புச் சட்டம் வழங்குகிறது. இரண்டு வகையான மானியங்கள் உள்ளன. அவை, சட்டப்பூர்வ மானியங்கள் மற்றும் தன்விருப்ப மானியங்கள்:

### A. சட்டப்பூர்வ மானியங்கள்

சரத்து 275, நிதி உதவி தேவைப்படும் மாநிலங்களுக்கு மானியம் வழங்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.

### B. தன்விருப்ப மானியங்கள்

சரத்து 282, சட்டபூர்வத் திறனுக்குள் இல்லாவிட்டாலும், எந்தவொரு பொது நோக்கத்திற்காகவும் மானியம் வழங்க மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

## I. நிதி ஆணையம்

- குடியரசுத்தலைவரால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையோ அல்லது தேவையைக் கருதி அதற்கு முன்போ அமைக்கப்படும் ஒரு அரை-நீதித்துவ அமைப்பாக நிதி ஆணையத்தை சரத்து 280 வழங்குகிறது.
- நிதி ஆணையத்தால் செய்யப்படும் பரிந்துரைகள் ஆலோசனைத் தன்மை கொண்டவை எனவே அரசாங்கத்தை கட்டுப்படுத்துவதில்லை.

### அமைப்பு

- குடியரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள்.
- குடியரசுத் தலைவர் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ள காலத்திற்கு அவர்கள் பதவி வகிக்கின்றனர். அவர்கள் மறுநியமனத்திற்கு தகுதியானவர்கள்.
- தலைவர் மற்றும் உறுப்பினர்களின் தகுதிகள் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட நிதி ஆணைய (இதர விதிகள்) சட்டம், 1951 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பணிகள்

பின்வரும் விவகாரங்கள் தொடர்பாக இந்தியக் குடியரசுத் தலைவருக்கு நிதி ஆணையம் பரிந்துரை அளிக்க வேண்டும்:

- மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே வரிகளின் நிகர வருவாயை பகிர்ந்தளித்தல்.

- மத்திய அரசால் (இந்திய தொகுப்பு நிதியிலிருந்து) மாநிலங்களுக்கு வழங்கப்படும் மானியங்களை நிர்வகிக்கும் விதிமுறைகள்.

**நிதி ஆணையம் தனது அறிக்கையை குடியரசுத்தலைவரிடம் சமர்ப்பிக்கிறது.**

அதன் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் (சரத்து 281) பற்றிய விளக்கக் குறிப்பாணையுடன் அவர் அதை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் முன் வைக்க வேண்டும்.

## II. சரக்கு மற்றும் சேவை வரி (GST)

ஜிஎஸ்டி என்பது பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தின் மீது விதிக்கப்படும் மறைமுக வரி. இது அரசியலமைப்பின் **101வது திருத்தச் சட்டம்** 2016 மூலம் நடைமுறைக்கு வந்தது.

### சரத்து 269A: ஜிஎஸ்டி கவுன்சில்

101வது திருத்தச் சட்டம் 2016 தொடங்கப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் குடியரசுத் தலைவர் பின்வரும் உறுப்பினர்களை கொண்ட ஒரு ஜிஎஸ்டி கவுன்சிலை அமைக்க வேண்டும்:

- மத்திய நிதி அமைச்சர் - தலைவர்
- வருவாய் அல்லது நிதித்துறை பொறுப்பு மத்திய அமைச்சர் - உறுப்பினர்.
- ஒவ்வொரு மாநில அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்படும் நிதித்துறை அல்லது வரித்துறை அமைச்சர் அல்லது மற்ற அமைச்சர்கள் - உறுப்பினர்கள்

### மத்திய மாநில உறவுகளுக்கான ஆணையங்கள் மற்றும் குழுக்கள்

### நிர்வாக சீர்திருத்த ஆணையம்

- நடுவண் அரசு 1966ஆம் ஆண்டு பொதுவாக நிர்வாக சீர்திருத்தங்கள் பற்றி ஆய்வு செய்வதற்காக ஒரு ஆணையத்தை **மொராஜி தேசாய்** (பிறகு **ஹனுமந்தையா**) தலைமையில் அமைத்தது.
- இந்த ஆணையத்தின் ஒரு பணி மத்திய மாநில உறவுகள் பற்றிப் பரிசீலிப்பதாகும். இதைப் பரிசீலிப்பதற்காக இந்த ஆணையம் எம்.சி. செதல்வத் (M.C. Setalvad) தலைமையில் ஒரு ஆய்வுக் குழு (Study Team) வை அமைத்தது.

**பரிந்துரைகள்:**

- அரசியலமைப்பின் சரத்து 263இன் கீழ் மாநிலங்களுக்கிடையேயான மன்றம் (Inter – State Council) அமைத்தல்.
- ஆளுநர் பொது வாழ்வில் அனுபவம் உள்ளவராகவும் நடுநிலை தவறாகவும், சுதந்திரமாகச் செயல்படுபவராகவும் இருக்க வேண்டும். இவர் அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமேயன்றி நடுவண் அரசின் முகவராக இருக்கக் கூடாது.

இரண்டாவது ARC 2005 இல் **வீரப்ப மொய்லி** (பிறகு வி. ராமச்சந்திரன்) தலைமையில் உருவாக்கப்பட்டது.

## இராஜமன்னார் ஆய்வுக்குழு 1969:

- தமிழ்நாடு அரசு தன்னிச்சையாக மத்திய மாநில உறவுகளை ஆய்வு செய்வதற்காக பி.வி. இராஜ மன்னார் (P.V. Rajamannar) தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. டாக்டர் லட்சுமண முதலியாரும், பி.சி. சந்திர ரெட்டியும் இக்குழுவின் பிற உறுப்பினர்கள். இக்குழு அதன் 282 பக்க அறிக்கையை **1971** இல் தமிழ்நாடு அரசிடம் அளித்தது.

### பரிந்துரைகள்

- **மாநிலங்களுக்கிடையேயான மன்றம்** முதலமைச்சர்களைக் கொண்டிருக்க வேண்டும். இம்மன்றம் பிரதமர் தலைமையில் கூட வேண்டும்.
- அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.
- **அகில இந்தியப் பணிகள்** (IAS, IPS, IFS) அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்.
- **நிதி ஆணையம்** நிரந்தர அமைப்பாக மாற்ற வேண்டும்.
- **திட்ட ஆணையத்தினை** கலைத்து அதனை சட்டரீதியான அமைப்பாக மாற்ற வேண்டும்.
- மாநில அமைச்சர்கள் ஆளுநரின் விருப்பம் உள்ளவரை பணியில் இருப்பார் என்ற நிலையானது அரசியலமைப்பில் இருந்து நீக்கப்படவேண்டும்.
- சரத்துகள் 356,357 மற்றும் 365 (குடியரசுத்தலைவர் ஆட்சி உட்பட) முற்றிலும் நீக்கப்பட வேண்டும்
- நமது அரசியலமைப்பில் இருந்து 256, 257, 339(2) சரத்துகளை நீக்க வேண்டும்.

## ஆனந்தபூர் சாகிப் தீர்மானம், 1973

- 1973ம் ஆண்டு அகாலி தால் அமைப்பு அரசியல் மற்றும் சமயம் சார்ந்த கோரிக்கைகளை பஞ்சாப் மாநிலத்திலுள்ள ஆனந்தபூர் சாகிப்பில் நடந்த கூட்டத்தில் முன்வைத்தனர்.

### முக்கிய தீர்மானங்கள்

- மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் நாட்டுப் பாதுகாப்பு, வெளியுறவு, நாணயச் செலாவணி, தகவல் தொடர்பு ஆகியவை பற்றியதாக மட்டும் இருக்க வேண்டும்.
- எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.
- மத்திய அரசில் அனைத்து மாநிலங்களுக்கும் சம அதிகாரமும், சமத்துவமும், பிரதிநிதித்துவமும் அளிக்க வேண்டும்.
- அரசியல் அமைப்புச் சட்டம் உண்மையான கூட்டாட்சி முறையாக இருக்குமாறு எழுதப்பட வேண்டும்.

**மேற்கு வங்காள ஆவணம், 1977**

கம்யூனிஸ்ட்டுகள் தலைமையிலான அரசு, மத்திய-மாநில உறவுகள் குறித்த ஒரு ஆவணத்தை மத்திய அரசுக்கு அனுப்பியது.

**முக்கிய பரிந்துரைகள்:**

- இந்திய அரசியலமைப்பில் போன்று ஒன்றியம் (Union) என்ற சொல்லுக்கு பதில் கூட்டாட்சி முறை (Federation) என்ற சொல் இருக்க வேண்டும்.
- மாநில அரசால் கையாளப்பட முடியாத வெளிநாட்டு வர்த்தகம், வெளியுறவு, தேசப் பாதுகாப்பு, நாணயச் செலாவணி, தகவல் தொடர்பு, பொருளாதாரத் திட்டங்கள் ஒருங்கிணைப்பு போன்றவை மட்டுமே மத்திய அரசிடம் இருக்க வேண்டும்.

**சர்க்காரியா ஆணையம் (1983 – 1988)**

- மத்திய மாநில உறவுகள் தொடர்ந்து மோசமாகிக் கொண்டு இருந்ததால் மத்திய அரசு 1983 ஜுன் மாதம் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ். சர்க்காரியா தலைமையில் மத்திய மாநில உறவுகள் பற்றி விரிவாக ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் 1988 ஜனவரி மாதம் அதன் அறிக்கையை சமர்ப்பித்தது. இந்த அறிக்கையில் **247** பரிந்துரைகள் இடம் பெற்றுள்ளன.

**பரிந்துரைகள்**

- அரசுகளுக்கு இடையேயான (Inter – Governmental Council) மன்றம் எனப்படும் நிரந்தரமான மாநிலங்களுக்களுக்கிடையேயான குழு (Inter – State Council) அமைக்கப்பட வேண்டும் **(சரத்து 263)**
- அனைத்து மாற்றீடுகளும் தோல்வி அடையும் போது மிகவும் தீவிரமான சூழ்நிலையில மட்டுமே சரத்து 356 கீழ் உள்ள குடியரசுத் தலைவர் ஆட்சியை பயன்படுத்த வேண்டும்.
- தேசிய வளர்ச்சி கவுன்சில் (NDC) தேசிய பொருளாதார மற்றும் மேம்பாட்டு கவுன்சில் (NEDC) என மறுபெயரிடப்பட்டு மறுசீரமைக்கப்பட வேண்டும்.
- பொதுப்பட்டியலில் உள்ள ஒரு துறைகளில் சட்டம் இயற்றும் முன், மத்திய அரசு மாநிலங்களைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

**வெங்கடாச்சலையா குழு**

இந்திய அரசியலமைப்பில் சாத்தியமான திருத்தங்களை பரிந்துரைப்பதற்காக **பிப்ரவரி 2002** இல், அரசியலமைப்பின் செயல்பாட்டை மதிப்பாய்வு செய்வதற்கான தேசிய ஆணையம் (NCRWC) அமைக்கப்பட்டது.

**புன்ச்சி ஆணையம், 2007**

சர்க்காரியா ஆணையம் அமைக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய மாநில உறவுகள் பற்றி மறுசிரமைக்க உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம். பூஞ்சி தலைமையில் 2007 ஏப்ரல் 27ஆம் தேதி இரண்டாவது ஆணையம் அமைக்கப்பட்டது. இதன் அறிக்கை **2010**இல் தாக்கல் செய்யப்பட்டது.

**மத்திய மாநில உறவுகள்**

- நதிநீர் தகராறு தீர்ப்பாயங்கள்
- மாநிலங்களுக்கிடையேயான குழு
- மண்டல குழுக்கள்

## மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பிரச்சனைகள்

- அரசியலமைப்பின் **262 வது சரத்து** மாநிலங்களுக்கு இடையேயான நீர் தகராறுகளை தீர்ப்பதற்கான வரம்புகளை வழங்குகிறது.
- அதன் தொடர்பாக உச்ச நீதிமன்றமோ அல்லது வேறு எந்த நீதிமன்றமோ தலையிடக் கூடாது என்பதை நாடாளுமன்றம் முடிவு செய்யலாம்.
- இந்த சரத்தின்கீழ், நாடாளுமன்றம் இரண்டு சட்டங்களை இயற்றியுள்ளது [நதி வாரியங்கள் சட்டம் (1956) மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான நீர் தகராறு சட்டம் (1956)]
- நதி வாரியங்கள் சட்டம், மாநிலங்களுக்கு இடையேயான நதிகள் மற்றும் நதி பள்ளத்தாக்குகளை ஒழுங்குபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நதி வாரியங்களை நிறுவுவதற்கு வழங்குகிறது. சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் கோரிக்கையின் பேரில் அவற்றிற்கு ஆலோசனை வழங்க மத்திய அரசால் நதிநீர் வாரியம் அமைக்கப்படுகிறது.
- மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தகராறுகள் சட்டம், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையேயான நதி அல்லது நதிப் பள்ளத்தாக்கின் நீர் தொடர்பான பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஒரு தற்காலிக தீர்ப்பாயத்தை அமைக்க மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

## இதுவரை அமைக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு இடையேயான நீர் தகராறுகள் தீர்ப்பாயங்கள்

| வ.எண் | பெயர் | ஆண்டு | மாநிலங்கள் |
|---|---|---|---|
| 1 | கிருஷ்ணா நதிநீர் தகராறு தீர்ப்பாயம்-I | 1969 | மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் |
| 2 | கோதாவரி நதிநீர் தகராறு தீர்ப்பாயம் | 1969 | மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் ஒடிசா |
| 3 | நர்மதை நதிநீர் தகராறு தீர்ப்பாயம் | 1969 | ராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா |
| 4 | ராவி மற்றும் பியாஸ் நதிநீர் தகராறு தீர்ப்பாயம் | 1986 | பஞ்சாப், ஹரியானா மற்றும் ராஜஸ்தான் |
| 5 | காவிரி நதிநீர் தகராறு தீர்ப்பாயம் | 1990 | கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி |
| 6 | கிருஷ்ணா நதிநீர் தகராறு தீர்ப்பாயம்-II | 2004 | மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் |

- காவிரி நதிநீர் தகராறு தீர்ப்பாயத்தின் தீர்ப்பை செயல்படுத்த காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவை 2018 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன.

## மாநிலங்களுக்கிடையேயான குழு (Inter State Council)

- சரத்து 263- மாநிலங்களுக்கு இடையேயும், மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயும் உள்ள உறவை மேம்படுத்த மாநிலங்களுக்கிடையேயான குழு உருவாக்க குறிப்பிடுகிறது.
- அத்தகைய சபையை நிறுவுவதன் மூலம் ஏற்படும் பொது நலன் கருதி எந்த நேரத்திலும் குடியரசுத் தலைவர் அதை நிறுவ முடியும்.

## மாநிலங்களுக்கிடையேயான குழுவின் தோற்றம்

- மத்திய மாநில உறவுகள் பற்றிய சர்க்காரியா ஆணையம் (Sarkaria Commission on Centre – State Relations, 1988) மாநிலங்களுக்கிடையேயான மன்றம் அமைக்கப்பட வேண்டியதன் இன்றியமையாயாமையை அடிக்கோடிட்டுக் காட்டியது.
- சர்க்காரியா ஆணையத்தின் பரிந்துரைப்படி **1990** மே மாதம் **V.P. சிங்** தலைமையினால் ஆன ஜனதா தள அரசினால் இக்குழு குடியரசு தலைவரால் அமைக்கப்பட்டது. இக்குழு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

   i. தலைவர் பிரதமர்
   ii. மாநில முதலமைச்சர்கள்
   iii. சட்டமன்றத்தைக் கொண்ட யூனியன் பிரதேச முதல்வர்கள் இதன் உறுப்பினர்கள்
   iv. மத்திய உள்துறை அமைச்சர் உட்பட ஆறு அமைச்சர்கள்
   v. சட்டமன்றம் இல்லாத யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகள்
   vi. குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் உள்ள மாநிலங்களின் ஆளுநர்கள்

- மாநிலங்களுக்கிடையேயான குழு என்பது மாநிலங்களுக்கு இடையேயான, மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயான மற்றும் மத்திய-யூனியன் பிரதேச உறவுகள் தொடர்பான பிரச்சனைகளில் ஆலோசனை வழங்கும் அமைப்பாகும்.

## மாநிலங்களுக்கு இடையேயான வணிகம் மற்றும் வர்த்தகம்

அரசியலமைப்பின் பகுதி XIII இல் 301 முதல் 307 வரையிலான சரத்துகள் இந்திய எல்லைக்குள் வணிகம், வர்த்தகம் மற்றும் பரிமாற்றங்கள் பற்றிக் கூறுகின்றன.

இந்தியப் பகுதி முழுவதும் வணிகம், வர்த்தகம் மற்றும் பரிமாற்றங்கள் சுதந்திரமாக செயல்படலாம் என்று சரத்து 301 கூறுகிறது.

## மண்டலக் குழுக்கள் (Zonal Councils)

- மண்டலக் குழுக்கள் சட்டப்பூர்வமான (அரசியலமைப்பு அல்லாத) அமைப்புகளாகும். 1956 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம் மூன்றாம் பகுதியில் (Part III of the States Reorganisation Act, (1956) குறிப்பிட்டுள்ள படி 5 மண்டல குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன.

- ஒவ்வொரு மண்டலக் குழுவும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது: (a) மத்திய அரசின் உள்துறை அமைச்சர். (b) மண்டலத்தில் உள்ள அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்கள். (c) மண்டலத்தின் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் இரண்டு அமைச்சர்கள். (d) மண்டலத்தில் உள்ள ஒவ்வொரு யூனியன் பிரதேசத்தின் நிர்வாகி.

| **வ.எண்** | **பெயர்** | **உறுப்பினர்கள்** | **தலைமையிடம்** |
|---|---|---|---|
| 1 | வடக்கு மண்டல குழு | இமாச்சல பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான், டெல்லி, சண்டிகர், ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் | புது டெல்லி |
| 2 | மத்திய மண்டல குழு | உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட், சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேசம் | அலகாபாத் (பிரயாக்ராஜ்) |
| 3 | கிழக்கு மண்டல குழு | பீகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா | கொல்கத்தா |
| 4 | மேற்கு மண்டல குழு | குஜராத், மகாராஷ்டிரா, கோவா மற்றும் தாத்ரா மற்றும் நாகர் ஹாவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ | மும்பை |
| 5 | தெற்கு மண்டல குழு | ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரி | சென்னை |

**மண்டலக் குழுக்களின் நோக்கங்கள் (அல்லது செயல்பாடுகள்):**

- நாட்டில் உணர்வுபூர்வமான ஒருமைப்பாட்டை அடைய வழிவகை செய்தல்.
- தீவிரமான மாநில உணர்வு, பிராந்தியவாதம், மொழி பிரிவினைவாதம் ஆகியவற்றின் வளர்ச்சியைத் தடுக்க உதவுதல்.

மத்திய மற்றும் மாநில அரசுகள் சமூக மற்றும் பொருளாதார திட்டங்களில் ஒத்துழைக்கவும் மேலும் ஒரே மாதிரியான கொள்கைகளை உருவாக்குவதற்காக ஆலோசனைகள் மற்றும் அனுபவங்களை பரிமாறிக்கொள்ளவும் உதவுகிறது.

**வடகிழக்கு மண்டலக்குழு**

- 1971 இல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி வடகிழக்கு மண்டல குழு உருவாக்கப்பட்டது. இது ஆகஸ்ட் 8, 1972 முதல் செயல்படத் தொடங்கியது. 2002 இல் சிக்கிம் எட்டாவது உறுப்பினராக சேர்க்கப்பட்டது. அஸாம், மணிப்புர், மிசோரம், அருணாச்சல பிரதேசம், நாகாலாந்து, மெகாலயா, திரிபுரா மற்றும் சிக்கிம் இதன் உறுப்பினர்கள். இதன் தலைமையகம் ஷில்லாங்கில் உள்ளது.

- இதன் கூடுதல் பணிகள், முக்கியத்துவம் வாய்ந்த செயல்பாடுகளை உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தை உருவாக்குதல் மற்றும் அந்த பகுதியில் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கைப் பேணுவதற்கு மாநிலங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

APOLLO STUDY CENTRE